**கல்வி அமைச்சுக்கும்**

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கும் இடையில் இலஞ்சம் மற்றும் ஊழலை தவிர்ப்பதற்கான தேசிய வேலைத்திட்டம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை**

**1. அறிமுகம்**

2030 ஆம் ஆண்டளவில் இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்காக பாடசாலைப் பிள்ளைகள் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக செயற்படுவதற்கும் அது பற்றிய அவர்களது அறிவை அதிகரிப்பதற்காகவும் கல்விசார் நிகழ்ச்சித்திட்டமொன்றின் அவசியம் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன் பொருட்டு இலஞ்சம் மற்றும் ஊழலைத் தவிர்ப்பதற்காக நேர்மையைக் கட்டியெழுப்பும் நோக்குடனான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உச்சப் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சிறு வயது முதல் பாடசாலைப் பிள்ளைகளின் சிறந்த உளப்பாங்கை விருத்தி செய்யும் அபிலாஷையுடன் 2022 ஒக்டோபர் 01 ஆம் திகதி கொண்டாடப்படும் உலக சிறுவர் தினத்தை மையப்படுத்தி கல்வி அமைச்சுக்கும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கும் இடையில் 2022 ஒக்டோபர் 01 ஆம் திகதி ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை பின்வருமாறு, இந்த உடன்படிக்கை 2030 ஆம் ஆண்டின் இறுதி வரையில் செயல்வலுவில் இருக்கும்.

**2. நோக்கங்கள்**

2.1 இலஞ்சம் மற்றும் ஊழலை தவிர்ப்பதற்கான தேசிய செயல் திட்டத்திலுள்ள உத்தேச இரண்டாவது மூலோபாயமான ஒழுக்க விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட கல்வி மற்றும் சமூகப் பங்கேற்பு பிரவேசத்தின் ஊடாக இலங்கையில் நேர்மையான கல்விப் பிரவேசமொன்றை வழங்குதல்.

2.2 இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு, கல்வி அமைச்சு மற்றும் உயர் கல்வி அமைச்சு, தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் தேசிய கல்வி நிறுவகம் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து கல்வித் துறையிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், ஆசிரிய மாணவர்கள் மற்றும் மாணவ மாணவிகளை இலக்காகக் கொண்டு நேர்மையின் செய்தியை சமூகமயப்படுத்தல், அறிவூட்டல், வலுப்படுத்தல் மற்றும் அவர்களுக்கு மத்தியில் நேர்மையுள்ள மாணவர் பரம்பரையை உருவாக்குதல்.

2.3 இலஞ்சம் மற்றும் ஊழல் அற்ற சமூகமொன்றை உருவாக்குவதற்கு சிறு வயது முதலே பிள்ளைகளிடத்தில் சிறந்த உளப்பாங்கு விருத்தியை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்கால சமூகத்தில் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கான இடம்பாட்டை குறைத்தல் மற்றும் கல்விக் கட்டமைப்பில் மற்றும் அதற்கு வெளியே ஊழல் எதிர்ப்பு கலாசாரமொன்றை ஊக்குவித்தல்.

2.4 செற்படுத்தலின் மூலம் மாசற்ற சமூகக் கட்டமைப்பொன்றை கட்டியெழுப்பும் பொருட்டு பாடசாலை மாணவர்களினால் பாடசாலை சமூகத்தை விழிப்பூட்டல், இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக செயற்படுவதற்கு தலைமைத்துவத்தை வழங்க முடியுமான மற்றும் செயற்பட முடியுமான மாணவர் பரம்பரையொன்றை உருவாக்குதல்.

2.5 பரஸ்பர கௌரவம், நட்பு, சுய ஒழுக்கம் போன்ற நேர்மறையான விழுமியங்களை கட்டியெழுப்புவதன் ஊடாக நாட்டின் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் அபிமானம்மிக்க பிரஜையாக வாழ்வதன் பெறுமதியை மாணவர்களுக்கு புரியவைத்தல்.

2.6 ஒழுக்க விழுமியங்களின் அடிப்படையிலான கல்வி மற்றும் சமூகத் தலையீட்டுடன் நேர்மை எனும் எண்ணக்கருவை பாடசாலை மாணவர் சமூகத்திற்கு மத்தியில் விருத்தி செய்தல் மற்றும் சமூகத்தில் நிலவும் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளுக்கு பாடசாலை மாணவர்கள் எதிராக செயற்படுவதன் மூலம் சமூகத்திற்கு சிறந்த செய்தியொன்றை கொண்டுசெல்லல்.

இந்த நோக்கங்களை அடைந்துகொள்ளும் நோக்கில் இலஞ்சம் மற்றும் ஊழல் காரணமாக ஏற்படக்கூடிய சமூக, பொருளாதார, மானசீக மற்றும் ஆள் ரீதியான தாக்கங்கள் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு, ஆசிரியர்களுக்கு, பெற்றோருக்கு, அதிபர்களுக்கு மற்றும் கல்வித் துறையிலுள்ள ஏனைய உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு செயற்பாடுகள் ஊடாக புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சமூகத்தில் காணப்படும் இலஞ்சம் அல்லது ஊழலை குறைப்பதற்கும் இல்லாதொழிப்பதற்கும் உத்தேசிக்கப்படுகின்றது. இதற்காக பின்வரும் செயற்பாடுகளை கல்வி அமைச்சுடன் இணைந்து செயற்படுத்துவதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3. செயற்படுத்த உத்தேசிக்கும் செயற்பாடுகள் (2022-2030)

3.1 கல்வி அமைச்சின் விடயப் பரப்புக்கு இணைவான பிரிவுகள், ஆசிரியர் கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சி கலாசாலைகள், அதிபர்கள், பிரதி அதிபர்கள், மாணவத் தலைவர்கள், மாணவர் சங்கங்கள், பெற்றோர் ஆகிய பிரிவுகளின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல்.

3.2 இதன் போது கல்வி அமைச்சு, மாகாண கல்வி அமைச்சு, வலயக் கல்வி அலுவலகம் போன்றவற்றில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்காக நேர்மை பற்றிய சமூகக் கொள்கை தொடர்பிலான அறிவை விருத்திசெய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

3.3 கல்வி அமைச்சு, தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றுடன் கலந்துரையாடி இலஞ்சம் மற்றும் ஊழலின் பின்விளைவுகள் தொடர்பில் பாடசாலை பாடத்திட்டத்தில் உள்ளடக்குதல்.

3.4 ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்தரப் பாடசாலைகளின் பாட விதானத்தில் நேர்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு எண்ணக்கருக்களை அறிமுகம் செய்தல். (குடியுரிமைக் கல்வி விடயத்தின் கீழ் இந்த நேர்மை தொடர்பிலான மொடியூலை உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கப்படுகின்றது.)

3.5 நாடு பூராகவும் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் பாடசாலைகளில் நேர்மையுள்ள சமூகத்தை கட்டியெழுப்புதல் மற்றும் வலுவூட்டல் தொடர்பில் அதிபர்கள் மற்றும் உப அதிபர்களை பயிற்றுவித்தல் மற்றும் வலுவூட்டும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

3.6 பாடசாலையில் நேர்மையுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்புதல் (நடத்தை சார்ந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக சுதேச இலக்கிய படைப்புகள், சமயம், வரலாறு போன்ற ஊடகங்களைப் பயன்படுத்தல்.)

3.7 ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சிபெறும் ஆசிரியர்களுக்கும் கல்வி அமைச்சினால் ஆட்சேர்க்கப்பட்டு நியமனம் வழங்கப்படும் ஆசிரியர்களுக்கும் ஊழல் எதிர்ப்பு மற்றும் நேர்மை தொடர்பில் தேசிய கொள்கையை அறிமுகம் செய்தல் மற்றும் புரிந்துணர்வை ஏற்படுத்தல்.

3.8 பாடசாலை மாணவத் தலைவர்களை இலக்காகக் கொண்டு எதிர்கால நேர்மையுள்ள தலைவர்களை உருவாக்கும் நோக்கில் அறிவு, உளப்பாங்கு மற்றும் திறன் விருத்திக்கான செயலமர்வுகளை நடாத்துதல் (நடைமுறைசார்ந்த செயற்பாடுகளுடன்)

3.9 இலஞ்சம் மற்றும் ஊழலை தடுப்பதற்காக நேர்மை தொடர்பில் மாணவர்கள் மற்றும் பெற்றேர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

3.10 கல்வி அமைச்சு மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவுடன் புரிந்துணர்வை ஏற்படுத்தல்.

3.11 நேர்மையான சமூகம் தொடர்பிலான சுற்றறிக்கைகளை இற்றைப்படுத்தல்.

3.12 முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்க்கும் சுற்றறிக்கைகள் மற்றும் இடையிலுள்ள வகுப்புக்களுக்கு மாணவர்களை சேர்க்கும் சுற்றறிக்கைகளை இற்றைப்படுத்துவதற்காக இலஞ்சம் அல்லது ஊழலுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களை குறைக்கும் வகையில் நியதிகளை உள்ளடக்குவதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் வளவாளர்களின் உதவியை வழங்குதல்.

3.13 இலஞ்சம் அல்லது ஊழல் நிகழக்கூடிய சந்தர்ப்பங்களை குறைக்கும் வகையில் பாடசாலை அபிவிருத்திச் சங்க மற்றும் பழைய மாணவர் சங்க சுற்றறிக்கைகளை இற்றைப்படுத்துவதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் வளவாளர்களது உதவியை வழங்குதல்.

3.14 பாடசாலை மாணவர்கள் மற்றும் கல்வித் துறையுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களை அறிவூட்டுவதற்காக பேச்சுப் போட்டிகள், விவாதப் போட்டிகள், சித்திரப் போட்டிகள், இலக்கிய போட்டிகள் மற்றும் அறிவுக் களஞ்சியப் போட்டிகள் என்பவற்றைப் பல்வேறுபட்ட தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி நடாத்துதல்.

3.15 நேர்மை தொடர்பில் ஆய்வுக் கருத்தரங்குகளை மாணவர்கள் மற்றும் கல்வித் துறையுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்காக ஏற்பாடு செய்து நடாத்துதல்.

## 4. கல்வி அமைச்சின் பங்களிப்பு

4.1 மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பிரதி அதிபர்கள், அதிபர்கள், பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய ஆளணி உத்தியோகத்தர்களை அறிவூட்டும் பொருட்டான நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் ஏனைய உத்தேச செயற்பாடுகளை அடைந்துகொள்ளும் பொருட்டு ஒத்துழைப்பை வழங்குதல்.

4.2 இலஞ்சம் மற்றும் ஊழலை தவிர்ப்பதற்கு ஏற்ற வகையில் நியதிகளை தயாரித்தல் மற்றும் அவற்றை சுற்றறிக்கைகளில் உள்ளடக்குதல் (முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்க்கும் சுற்றறிக்கைகளை தயாரித்தல், இடையிலுள்ள வகுப்புக்களுக்கு மாணவர்களை சேர்க்கும் சுற்றறிக்கைகளை தயாரித்தல், பாடசாலை அபிவிருத்திச் சங்க மற்றும் பழைய மாணவர் சங்கங்களின் நடவடிக்கைகள் குறித்த சுற்றறிக்கைகளை தயாரித்தல்)

4.3 கல்வி அமைச்சுக்கும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு வசதியளித்தல்.

4.4 பாடசாலை பாடத்திட்டத்தில் இலஞ்சம் மற்றும் ஊழலின் பின்விளைவுகள், நேர்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு எண்ணக்கருவை அறிமுகம் செய்வதற்குத் தேவையான நியதிகளைத் தயாரித்தல் மற்றும் அவற்றை விடயதானத்தில் உள்ளடக்குதல்.

4.5 நேர்மை தொடர்பில் ஆய்வுக் கருத்தரங்குளை (Integrity Symposium) நடாத்துவதற்கு வசதியளித்தல் மற்றும் தேவையான பங்களிப்பை வழங்குதல்.

**5. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் பங்களிப்பு**

5.1 இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு தொடர்பில் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வளவாளர்களை வழங்குதல்.

5.2 சுற்றறிக்கை திருத்தங்களுக்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் உதவியையும் வளவாளர்களையும் வழங்குதல். (முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்க்கும் சுற்றறிக்கைகளை தயாரித்தல், இடையிலுள்ள வகுப்புக்களுக்கு மாணவர்களை சேர்க்கும் சுற்றறிக்கைகளை தயாரித்தல், பாடசாலை அபிவிருத்திச் சங்க மற்றும் பழைய மாணவர் சங்கங்களின் நடவடிக்கைகள் குறித்த சுற்றறிக்கைகளை தயாரித்தல்)

5.3 பாடசாலை பாடத்திட்டத்தில் இலஞ்சம் மற்றும் ஊழலின் பின்விளைவுகள், நேர்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு எண்ணக்கருவை அறிமுகம் செய்வதற்குத் தேவையான வளவாளர்களை வழங்குதல்.

5.4 இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் கல்வி அமைச்சுடன் இணைந்து ஒழுங்கு செய்யும் போட்டிகள் மற்றும் நேர்மை தொடர்பில் ஆய்வுக் கருத்தரங்குளை (Integrity Symposium) நடாத்துவதற்கு சான்றிதழ்களை அச்சிடுதல், பரிசுகளை வழங்குதல் மற்றும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கான முழுமையான அனுசரணையை வழங்குதல். (வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்களில் கல்வி அமைச்சு சார்பில் கல்வி அமைச்சின் செயலாளரும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு சார்பில் அதன் பணிப்பாளர் நாயகமும் கையொப்பம் இடுவர்)

5.5 கல்வி அமைச்சுக்கும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு வசதியளித்தல்.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் தரப்பினர்களுக்கு மத்தியில் ஏற்படுத்திக்கொள்ளும் இணக்கத்தின் பேரில் மாற்றங்களை செய்ய முடியும். மேலும், இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலப் பிரதி சிங்கள மொழியில் எழுதப்பட்டு கையொப்பம் இடப்பட்டுள்ளதால் வேறு மொழிக்கு மொழிபெயர்க்கும் போது ஏதேனும் பொருள் மயக்கம் ஏற்படுமிடத்து சிங்கள மொழி வாசகமே மேலோங்கும்.

**6.** இந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக கல்வி கல்வி அமைச்சு சார்பில் கல்வி அமைச்சின் செயலாளர் ……………………… அவர்களின் வழிகாட்டலின் கீழ் அதிகாரம் வழங்கப்படும் உத்தியோகத்தர் ஒருவரும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் அதிகாரம் வழங்கப்படும் உத்தியோகத்தர் ஒருவரும் நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை இரண்டு தரப்பினர்களாலும் 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் ……..ஆம் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

**கல்வி அமைச்சு சார்பாக**

……………………………

எம்.என். ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு

**ஆணைக்குழு சார்பாக**

……………………………

டபிள்யு.கே.டி. விஜேரத்ன
பணிப்பாளர் நாயகம்
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு

**சாட்சிகள்**

………………………..

1. மேலதிக செயலாளர்
   கல்வி அமைச்சு

………………………………………….

1. செயலாளர்
   இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு

……………………………

2. மேலதிக செயலாளர்
   கல்வி அமைச்சு

…………………………………

2. பிரதிப் பணிப்பாளர் நாயம்
   இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு